# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 148/8 — 1975 ජනවාරි 30 වැනි බ්‍රහස්පතින්දා — 1975.01.30

148/8 ஆம் இலக்கம் — 1975 ஆம் ஆண்டு சனவரி மாதம் 30 ம் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

எல். டீ.—பி. 51/50.

**கொழும்பு கப்பற்றுறை (நிர்வாக)ச் சட்டம்**

(238 ஆம் அத்தியாயமான கொழும்பு கப்பற்றுறை நிர்வாகச் சட்டத்தின் 12 (2) ஆம் பிரிவின் கீழ் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு கப்பற்றொழில், சுற்றுலா அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

பீ. பி. ஜீ. கலுகல்ல,
கப்பற்றொழில், சுற்றுலா அமைச்சர்.

கொழும்பு,
28.01.1975

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 1975 ஆம் ஆண்டின் கொழும்பு கப்பற்றுறை (கப்பற்றுறைக் கட்டணங்கள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக் காட்டப்படலாம்.

**(1) இழுவைக் கப்பற் கட்டணங்கள்**

*கலக்கிடை செய்வதற்கு இழுவைக் கப்பல்களை பயன்படுத்துவதற்கான கட்டணங்கள்*

2. அரசாங்க இழுவைக் கப்பல்களை உபயோகிப்பதற்கெனப் பின்வரும் கட்டணங்கள் அறவிடப்படுதல் வேண்டும் :—

| | | ரூ. | ச. |
|---|---|---|---|
| (i) | துறைமுகத்துள் வரும்பொழுது மரக்கலத்தைக் கலக்கிடையில் நிறுத்துவதற்கும், துறைமுகத்தைவிட்டுப் போகும்பொழுது அதைக் கலக்கிடையில் இருந்து வெளியேற்றுவதற்கும், மரக்கலங்கள் துறைமுகத்துக்குள் கலக்கிடைகளை மாற்றிக்கொள்ளத் துணைபுரிவதற்கும், இழுவைக்கப்பல் ஒன்றுக்கு | 600 | 0 |
| (ii) | " கப்டனின் " கட்டளையின் கீழல்லாத மரக்கலங்கள் துறை முகத்துக்குள் கலக்கிடைகளை மாற்றிக் கொள்ளத்துணை புரிவதற்கு இழுவைக் கப்பல் ஒன்றுக்கு | 1,200 | 0 |
| (iii) | துறைமுகத்திற்கு வெளியே, ஆனால் கப்பற்றுறை எல்லைகளுக்குள் நிற்கும் " கப்டனின் " கட்டளையின் கீழல்லாத மரக்கலங்களுக்குத் துணைபுரிவதற்கு மணித்தியாலம் ஒன்றுக்கு | 1,800 | 0 |
| (iv) | துறைமுகத்திற்கு வெளியே கப்பற்றுறை எல்லைகளுக்கு அப்பால் தொழில் செய்விப்பதற்கென இழுவைக்கப்பல்களை வாடகைக்கு அமர்த்துவதற்கு, கட்டணங்கள் கப்பற்றுறை ஆணையாளரால் நிர்ணயிக்கப்படும் | — | |
| (v) | நெருப்புக்கான பெருநீர்க் குழாயைப் பயன்படுத்துவதற்கு மணித்தியாலம் ஒன்றுக்கு .. .. .. | 600 | 0 |
| (vi) | ஒரு இழுவைக்கப்பலிலிருந்து மரக்கலம் ஒன்றுக்கு நீராவி வழங்குவதற்கு, மணித்தியாலம் ஒன்றுக்கு .. .. | 600 | 0 |

*வாடகைக்கு அமர்த்துவதற்கு நிபந்தனைகள்*

(அ) இழுவைக்கப்பல் அனுப்பப்படும்பொழுது, அந்த இழுவைக்கப்பலையும், அதன் உத்தியோகத்தர்களையும், கப்பற் கணங்களையும் பொருள் மீட்கும் துளைப்பொறிகளையும், கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுவின் கப்பற்றுறை ஆணையாளரால் விதிக்கப்படும் வீதங்களில் காப்புறுதி செய்ய இணங்கிக் கொள்ளும் ஒரு உடன்படிக்கையில் இழுவைக்கப்பலை வாடகைக்கு அமர்த்துபவர் கைச்சாத்திடுதல் வேண்டும்.

(ஆ) இழந்துபோன அல்லது சேதமடைந்த் கப்பிக் கௌவி, பண்டங்கள், சாதனங்கள் கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுவின் கப்பற்றுறை ஆணையாளர் திருப்தியடையும் அளவிற்கு வாடகைக்கு அமர்த்துபவரின் செலவில் பதிலிடப்படுதல் வேண்டும். அல்லது அவற்றிற்கான செலவு தொகைகள் அரசாங்கத்தினுல் அங்கீகரிக்கப்பட்ட வீதங்கள் அவரிடமிருந்து அறவிடப்படும்.

(இ) இச்செலவு தொகைகளை மதிப்பிடும் நோக்கத்திற்கென, சாதாரண துறைமுக ஊழியத்திற்கு இழுவைக் கப்பல் கிடைக்காமற் போகும் நேரத்திலிருந்து, மறுபடியும் அது சாதாரண துறைமுக ஊழியத்திற்குக் கிடைக்கும் நேரம் வரைக்கும், அது வாடகைக்கு விடப்பட்டிருந்ததாகக் கருதப்படுதல் வேண்டும்.

### (2) அருகாமைக் கலக்கிடைகளை உபயோகிப்பதற்கான கட்டணம்

3. கொழும்பு கப்பற்றுறையில் கப்பல் செப்பனிடுதுறை, கயிட்மேண்ட, எண்ணெய்த்துறைகள் ஆகியவை தவிர்ந்த மற்றெந்த அருகாமை மேடையிலும், அல்லது இறங்குதுறையிலும், இருபத்துநான்கு மணித்தியாலங்களைக் கொண்ட ஒரு நேரத்திற்கு அல்லது அதன் பகுதிக்கு, மரக்கலத்தின் பதிவு செய்யப்பட்ட தேறிய தொன் எடையில் தொன் ஒன்றுக்குப் பதினைந்து சதம் வீதம் கணிக்கப்பட்ட கட்டணம் ஒன்று கப்பற்றுறை ஆணையாளரால் அறவிடப்படும்.

### (3) செய்கரைக்கட்டுச் சாய்தளத்துறை, படகுமனைச் சாய்தளத்துறை 100 தொன் சாய்தளத்துறை தெப்பம் பழுதுபார்க்கும் துறைக்கான கட்டணங்கள்

| | ரூ. ச. |
|---|---|
| *(1) செய்கரைக்கட்டுச் சாய்தளத்துறை, படகுமனைச்சாய்தளத்துறை : | |
| (i) தங்கிநிற்றல்— | |
| முதல் 4 நாட்கள் அல்லது அதன் பகுதிக்கு .. .. .. .. | 480 0 |
| அடுத்துவரும் நாள் ஒவ்வொன்றுக்கும் அதன் பகுதிக்கும் .. .. .. .. | 180 0 |
| (ii) கட்டுகளும், கரைகளும், விசேடமாக ஏற்பாடு செய்யப்படின் .. .. .. .. | 125 0 |
| *(2) 100 தொன் சாய்தளத்துறை :— | |
| (i) தங்கி நிற்றல்— | |
| முதல் 4 நாட்கள் அல்லது அதன் பகுதிக்கு .. .. .. .. | 1,120 0 |
| அடுத்துவரும் நாள் ஒவ்வொன்றுக்கும் அல்லது அதன் பகுதிக்கு .. .. .. .. | 300 0 |
| (ii) கட்டுகளும், கரைகளும் விசேடமாக ஏற்பாடு செய்யப்படின் .. .. .. .. | 150 0 |
| (3) தெப்பம் பழுதுபார்க்கும் துறை : | |
| முதல் 7 நாட்கள் அல்லது அதன் பகுதிக்கு .. .. .. .. | 960 0 |
| அடுத்துவரும் நாள் ஒவ்வொன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு .. .. .. .. | 150 0 |

*சாய்தளத்துறைகளுக்குப் பொறுப்பாகவுள்ள அல்லது அவற்றின் தொடர்பில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள அலுவலர்களதும், ஊழியர்களதும் சாதாரண வேலை நேரங்கள் : மு. ப. 7 இலிருந்து நடுப்பகல் 12.00 மணி வரையும் பி. ப. 12.30 இலிருந்து பி. ப. 4.30 வரையும்.

சாய்தளத்துறைகளைப் பயன்படுத்துவதற்கான விண்ணப்பங்கள் அது தேவைப்படும் நேரத்துக்கு ஆகக் குறைந்தது 24 மணி நேரத்திற்கு முன்னராகவேனும் எழுத்திலே செய்யப்படுதல் வேண்டும். அத்தகைய விண்ணப்பங்கள் சாதாரண வேலை நேரங்களில் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

வழமையான வேலை நேரங்களுக்குப் புறம்பான காலங்களிலும் சனிக்கிழமைகளிலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும், பொது விடுமுறை நாட்களிலும் உறப்படும் பணியாட்டொகுதியினர்க்கான எல்லாச் செலவுகளும், எவையேனும் திணைக்கள மேலதிக நிருவாகச் செலவுகள் உட்பட உரிய மரக்கலத்தின் மீது பொறுப்பிக்கப்படும்.

### (4) கொழும்புக் கப்பற்றுறை ஆணைக்குழுவினரின் மிதக்கும் பாரந்தூக்கிகளை வாடகைக்கமர்த்துவதற்கான கேள்வு

1. பாரந்தூக்கி ஒன்று எந்த மரக்கலத்தில் அல்லது எந்தச் செய்கரையில் ஓரமாக அது வந்து சேரும்படி பணிக்கப்பட்டதோ அந்த மரக்கலத்தின் அல்லது செய்கரையின் ஓரமாக வந்தடைந்த நேரத்திலிருந்து அந்தப்பாரந்தூக்கியின் மேற்றளத்தில் எவ்வித கப்பற் சரக்கேதும் இல்லாது வாடகைக் கமர்த்தியவரால் முற்றும் விடுவிக்கப்படும் நேரம் வரையில் வாடகைக் கமர்த்தப்பட்டிருந்ததாகக் கருதப்படுதல் வேண்டும்.

2. வாடகைக்கமர்த்தப்பட்டிருந்த காலத்துள் பாரந்தூக்கியினுலுயர்த்தப்பட்ட எவையேனும் தனிப்பொருள்களுக்கு அல்லது பொதிகளுக்கு அல்லது அவற்றால் எதுவிதத்திலாயினும் ஏற்படுகின்றன ஏதேனும் விபத்து அல்லது சேதத்துக்குத் துறைமுக ஆணையாளர் மீது எவ்வித பொறுப்பேனும் சுமத்தப்படுத்தலாகாது.

3. பாரந்தூக்கியைப் பயன்படுத்துவதற்கான விண்ணப்பம், எவ்விடத்தில் அப்பாரந்தூக்கி நிறுத்தப்படவேண்டும், அதாவது ஒரு குறிப்பிட்ட மரக்கலத்தின் குறிப்பான பண்டகக் கிடங்கிற்கு இடப்புறத்திலா, அல்லது வலப்புறத்திலா வைக்கப்பட வேண்டும், அல்லது குறிப்பிடப்படும் ஒரு நிலையத்திலா வைக்கப்பட வேண்டும் என்பதனைத் திட்டவட்டமாகக் கூறி அப்பாரந்தூக்கி தேவைப்படும் நேரத்துக்கு வார நாட்களாயின் பன்னிரண்டு மணித்தியாலங்களுக்கு முன்னரும், சனிக்கிழமைகளிலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும், பொது விடுமுறை நாட்களிலும் இருபத்திநான்கு மணித்தியாலங்களுக்கு முன்னரும் எழுத்தில் துறைமுக கல கண்காணிப்பாளருக்கு செய்யப்படுதல் வேண்டும். விண்ணப்பத்துக்கான படிவங்களைத் துறைமுக ஆணையாளரின் அலுவலகத்தில் கோரிப் பெற்றுக் கொள்ளலாம்.

4. வாடகைக்கமர்த்துபவர் 12 ஆம் பந்தியிற் குறிப்பிட்டவாறுள்ள தொன் தொகைக் கட்டன வகைகளோடு 11 ஆம் பந்தியிற் குறிப்பிடப்பட்ட கட்டண வகைகளைப் பாரந்தூக்கியின் உபயோகத்துக்கெனக் கட்டணப்பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டதிலிருந்து பத்து நாட்களுள் துறைமுக ஆணையாளருக்குச் செலுத்துதல் வேண்டும்.

5. வாடகைக்கமர்த்தப்பட்டிருந்த காலத்துள் சொல்லப்பட்ட பாரந்தூக்கியினால் இறக்கப்பட்ட கப்பற் சரக்குகளை ஏற்று இடம் பெயர்ப்பதற்கெனப் பெறப்பட்டுள்ள கப்பல்கள், சிறு வள்ளம், தெப்பம் அல்லது வேறெவ்விதப் போக்குவரத்துச் சாதனத்துக்கேனும், கப்பற் சரக்குக் கேனும், ஏற்படும் எந்தச் சேதத்துக்கும் துறைமுக ஆணையாளராயினும் துறைமுக ஆணைக்குழுவினரின் ஊழியன் எவராயினும் பொறுப்புடையவராகார்.

6. அந்தப் பாரந்தூக்கி எந்த மரக்கலத்தின் ஓரமாக அமைக்கப்படவேண்டும் எனக் கோரப்பட்டுள்ளதோ அந்த மரக்கலத்தின் அப்புறத்தில் அப்பாரந்தூக்கி வாடகைக்கமர்த்தப்பட்டுள்ள காலத்தில் வேறு மரக்கலங்கள் இல்லாது பார்த்துக் கொள்ள வேண்டியது வாடகைக்கமர்த்துபவரின் பொறுப்பாதல் வேண்டும்.

7. மிதக்கும் பாரந்தூக்கி சாதாரணமாகக் காலை 8.30 இலிருந்து மாலை 6 வரை சனிக்கிழகைள், ஞாயிற்றுக்கிழமைகள், பொதுவிடுமுறை நாட்கள் உட்பட கிடைக்கக் கூடியதாகவிருக்கும். எனினும் இம்மிதக்கும் பாரந்தூக்கியைக் காலை 8.30 க்கு முன்னரும், மாலை 6 க்குப் பின்னரும் வாடகைக்கமர்த்த வேண்டிய தேவை எழுந்தால் வாடகைக்கமர்த்துபவர், எழுத்தில் துறைமுக கல கலன் கண்காணிப்பாளருக்குக்கூடாக அனுப்பப் பட வேண்டிய விண்ணப்பத்தின் மூலம் கப்பற்றுறைமுக ஆணையாளரின் விசேட அனுமதியைப் பெறுதல் வேண்டும். அத்தகைய காலத்தில் அப்பாரந்தூக்கியை உபயோகப்படுத்துவதற்கான கட்டணங்கள் 11 ஆம் பந்தியிற்றரப்பட்டுள்ள கட்டணங்களின் இரு மடங்கினவையாகும்.

8. அன்றைய வேலை முடிந்ததும் பாரந்தூக்கியைத் தனது நங்கூரம் பாய்ச்சும் இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட வாடகைக்கமர்த்துபவர் ஏற்பாடு செய்தல் வேண்டும். எக்காரணத்தினைக் கொண்டும், மிதக்கும் பாரந்தூக்கி மரக்கலத்தின் ஓரமாகவேனும் கப்பற்றுறை மேடைப்புறத்திலேனும், 7 ஆம் பந்தியிற் குறிப்பிட்ட விசேட அனுமதியின்றி மாலை 6 மணிக்குப் பின்னர் இருப்பதற்கு விடப்படுதலாகாது.

9. வாடகைக்கமர்த்துபவரின் முகவர் அல்லது ஊழியர் ஒருவரது கவனக் குறைவான செயலின் காரணமாகப் பாரந்தூக்கிக்கு ஏதும் சேதம், ஏற்படின் வாடகைக் கமர்த்துபவர் அதனைப் பழுது பார்த்தற்கான முழுச் செலவினையும் துறைமுக ஆணையாளருக்குச் செலுத்துதல் வேண்டும்.

10. ஏற்றி, இறக்க வாய்ப்பளிக்கும் பாரந்தூக்கியின் செலுத்துநர் வாடகைக் கமர்த்துபவரின் அல்லது அவரின் முகவரின் விசேட தேவைகளுக்கென வேலை செய்வார். எனினும் செலுத்துநரின் கருத்துப்படி பாரமுயர்த்தி பாதுகாப்பாகத் தொங்க விடப்பட்டிராவிடில் அல்லது பாதுகாப்பான தான தகுந்த காப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட முடியாததாயின் ஏற்றியிறக்க வாய்ப்பளிக்கும் பாரந்தூக்கியின் செலுத்துநர் பாரந்தூக்கியை வேலை செய்வதிலிருந்து நிறுத்தி வைத்தல் வேண்டும்.

11. மிதக்கும் பாரந்தூக்கிக்கான கட்டணங்கள் பின்வருமாறு :—

1½ தொன்னுக்கு மேற்பட்டும் 4 தொன்னுக்கு மேற்படாததுமுள்ள பாரத்துக்கு—ஒரு தொன்னுக்கு அல்லது அதன் பகுதிக்கு ரூபா 15 வீதம்.

4 தொன்னுக்கு மேற்பட்டும் 8 தொன்னுக்கு மேற்படாததுமுள்ள பாரத்துக்கு—ஒரு தொன்னுக்கு அல்லது அதன் பகுதிக்கு ரூபா 20 வீதம்.

8 தொன்னுக்கு மேற்பட்டும் 15 தொன்னுக்கு மேற்படாததுமுள்ள பாரத்துக்கு—ஒரு தொன்னுக்கு அல்லது அதன் பகுதிக்கு ரூபா 25 வீதம்.

15 தொன்னுக்கு மேற்பட்டும் 30 தொன்னுக்கு மேற்படாததுமுள்ள பாரத்துக்கு—ஒரு தொன்னுக்கு அல்லது அதன் பகுதிக்கு ரூபா 35 வீதம்.

30 தொன்னுக்கு மேற்பட்டும் 60 தொன்னுக்கு மேற்படாததுமுள்ள பாரத்துக்கு—ஒரு தொன்னுக்கு ரூபா 50 வீதம் அல்லது அதன் பகுதிக்கு.

நாளொன்றுக்கு ரூபா 150 வீதமான ஆகக் குறைந்த கட்டணம் ஒன்று செலுத்தப்படல் வேண்டும். செய்யப்பட்ட ஒவ்வொரு தூக்குதற் சேவைக்கும் 30 நிமிடநேர வெறுங்காலம் ஒன்று விடுத்து, வாடகைக் கமர்த்தப்பட்டிருந்த காலத்துக்கென ஒவ்வொரு அரை மணித்தியாலத்துக்கும் அல்லது அதன் பாகத்துக்கும் ரூபா 50 வீதமான கட்டணமும் அத்துடன் செலுத்தப்படல் வேண்டும்.

12. மிதக்கும் பாரந்தூக்கியின் தளத்தின் மேல் உயர்த்தி இருக்கும் வரைக்கும் பாரந்தூக்கியை வாடகைக்கமர்த்தியவரால் தயார் நிலைக் கட்டணம் செலுத்தற்பாலதாகவிருக்கும் வரைக்கும், பாரந்தூக்கி வாடகைக்கமர்த்தப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

13. பாரந்தூக்கியை அது செயலாற்ற வேண்டிய இடத்துக்கு அல்லது அந்த இடத்திலிருந்து வேறிடத்துக்கு இழுத்துச் செல்ல வேண்டிய வேலை கப்பல் முகவரால் அல்லது வாடகைக்கமர்த்துபவரால் செய்யப்பட வேண்டும். பாரந்தூக்கியை இழுத்துச் செல்வதற்கென அட்டவணைப்படுத்தப்பட்ட வழமையான விகிதங்களில் இழுவைக் கப்பற் கட்டணம் அறவிடப்படும்.

குறிப்புகள்.—(i) திரும்பத் தூக்கி ஏற்றுவதற்கென ஏற்றுமதி இறக்குமதித் துறையில் பறிக்கப்பட்ட பொருள்கள், மரக்கலத்திலிருந்து பறித்தலாகிய முதற்படியான இயக்கத்துக்கு மேற்றரப்பட்டுள்ள விகிதங்களான கட்டணங்களும், திரும்ப அத்துறையிலிருந்து தூக்கிப் பின் பறித்தலுக்கு மேற்றரப்பட்டவற்றின் அரைவாசி விகிதங்களிலான கட்டணங்களும் அறவிடப்படும்.

(ii) மிதக்கும் பாரந்தூக்கிக்கென வேண்டுகோள் ஒன்று விடுத்துப் பின்னர் 4 மணித்தியால அறிவித்தல் கொடாது அவ்வேண்டுகோளை நீக்கினால் ரூபா 120 கட்டணம் செலுத்தப்படல் வேண்டும்.

(iii) சனிக்கிழமைகளிலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும், பொதுவிடுமுறை நாட்களிலும் மிதக்கும் பாரந்தூக்கி ஒன்று தேவைப்படின் அதனை வாடகைக்கமர்த்துபவர் மேற்கூறப்பட்ட 4 ஆம் பந்தியின் நியதிக்கிணங்க அது தேவைப்படும் நேரத்துக்கு ஆகக் குறைந்தது 48 மணி நேரத்துதிற்கு முன்னராகவேனும் துறைமுக கல கண்காணிப்பாளருக்கு எழுத்தில் விண்ணப்பஞ் செய்தல் வேண்டும். அத்தகைய நாட்களில் பாரந்தூக்கியை உபயோகிப்பதற்கான கட்டணம், 11 ஆம் பந்தியிற் கூறப்பட்டுள்ள விகிதங்களின் இருமடங்கானதாகும்.

### (5) கொழும்பில் எண்ணெய் வசதிகள்

1. கொழும்பில் எண்ணெய் வசதிகள் தொடர்பில் பின்வரும் கட்டணங்கள் அறவிடப்படுகின்றன :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| (1) மொத்த அளவில் இறக்குமதி செய்யப்பட்ட, ஏற்றுமதி செய்யப்பட்ட அல்லது மறு கப்பலுக்கு மாற்றப்பட்ட பெற்றோலியப் பொருட்கள் எல்லாவற்றின் மீதும், ஒவ்வொரு 1000 கலனுக்கும் அல்லது அதன் பகுதிக்கும்— | | |
| (அ) பண்படுத்தா எண்ணெய் | 8 | 0 |
| (ஆ) ஏனைய பெற்றோலியப் பொருட்கள் | 16 | 0 |
| (2) மொத்த அளவில் ஏற்றுமதி செய்யப்படும் எல்லாத் தேங்காய் எண்ணெய் மீதும்— | | |
| (அ) எண்ணெய் ஒரு தொன் வீதம் அல்லது அதன் பகுதிக்கு | 22 | 0 |
| (ஆ) சனிக்கிழமைகளில், ஞாயிற்றுக்கிழமைகளில், பொது விடுமுறை நாட்களில், ஏனைய நாட்களில் வழமையான வேலை நேரங்களுக்கப்பால், திணைக்களப் பணியாட்தொகுதி ஈடுபட்டிருப்பின் மணி ஒன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கான மேலதிகக் கட்டணம் | 60 | 0 |
| (இ) மொத்த அளவிலான தேங்காய் எண்ணெயில் உள்ள ஈரத்தன்மை அல்லது அசுத்தங்கள் தொடர்பில் அரசாங்கப் பகுப்பாளரின் மேலதிகமான சான்றிதழ்கள் தருவதற்கான கட்டணம் | 30 | 0 |

இவ்வொழுங்குவிதியில் "சாதாரண வேலை நேரங்கள்" என்பது எல்லா வேலை நாட்களையும் மு.ப. 7 மணி முதல் ந.ப. 12.00 வரையும் பி.ப. 12 30 மணி முதல் 4.30 வரையும் ஆகும்.

(3) தொகை எண்ணெய் நிறுவனத்தில் சனிக்கிழமைகளிலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும், பொது விடுமுறை நாட்களிலும் வேலை நேரத்துக்கு புறம்பான நேரங்களிலும் தேங்காய் எண்ணெய் ஏற்றுக்கொள்வதற்கு கப்பற் சரக்கேற்றுபவரிடமிருந்து ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் அல்லது அதன் பகுதிக்கும் ரூபா 90 ஆன ஒரு கட்டணம் அல்லது அதன் பகுதி அறவிடப்படுதல் வேண்டும்.

2. எண்ணெய் கப்பற்றுறை ஓரமாக நங்கூரமிடப்பட்டுள்ள மரக்கலம் ஒன்று தொடர்பில் செலுத்தப்பட்ட வேண்டிய கட்டணங்கள் பின்வரும் விகிதங்களில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும் :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| (1) எரிபொருள் திரும்பச் சேகரிக்கும் நோக்கமாக— | | |
| முதல் நான்கு மணிகளுக்கு அல்லது அதன் பகுதிக்கு | 325 | 0 |
| அடுத்த ஒவ்வொரு மணிக்கு அல்லது அதன் பகுதிக்கு | 65 | 0 |
| (2) தொகையாக பெற்றோலியப் பொருட்களை ஏற்றுவதற்கும் அல்லது இறக்குவதற்கும்— | | |
| முதல் ஆறு மணிகளுக்கு அல்லது அதன் பகுதிக்கு | 150 | 0 |
| ஆறு மணிக்கு மேற்பட்ட ஆனால் 12 மணிக்கு மேற்படாத காலத்துக்கு | 325 | 0 |
| 12 மணிக்கு மேற்பட ஆனால் 18 மணிகளுக்கு மேற்படாத ஒரு காலத்துக்கு | 490 | 0 |
| 18 மணிக்கு மேற்பட ஆனால் 24 மணிகளுக்கு மேற்படாத காலத்துக்கு | 650 | 0 |
| அடுத்த ஒவ்வொரு ஆறு மணிகளுக்கு அல்லது அதன் பகுதிக்கு | 85 | 0 |

(3) கப்பற் சரக்கைக் கையாளுவதற்கு, 24 மணித்தியாலங்கள் கொண்ட காலத்துக்கு அல்லது அதன் பகுதிக்கு கலத்தின் தேறிய பதிவு செய்யப்பட்ட தொன்னிறையின் ஒவ்வொரு தொன்னுக்கும் .. .. .. ரூ. ச. 0 15

மேலே (1), (2) ஆகிய உப்பந்திகளின் கீழ்ச் செலுத்துவதற்குரிய கட்டணங்கள்

(அ) மரக்கலம் ஒன்று வேறொரு நங்கூரம் பாய்ச்சும் இடத்துக்குச் செல்லுவதற்குப் பதிலாகக் கொழும்புத் துறைமுக ஆணைக் குழுவினரின், துறைமுக ஆணையாளரின் விசேட அனுமதியுடன் எண்ணெய்க்கான செய்துறைகளின் ஓரமாகத் தங்கிநிற்கும் எக்காலத்துக்கேனும்,

(ஆ) பெற்றோலியப் பொருள்களைப் பறித்துவிட்டு, நிலைப்படுத்தச் செய்யும் நோக்கத்துக்காக மரக்கலம் ஒன்று, எண்ணெய்க்கான செய்துறை ஓரமாக நங்கூரமிடப்பட்டிருந்த காலத்தின் முதல் ஆறு மணிகளுக்கு அல்லது அதன் பாகத்துக்கேனும்,

அறவிடப்படுதலாகாது.

(4) பின்வரும் விகிதத்தில் தீர்மானிக்கப்படும் மேலதிகக் கட்டணம் ஒன்று, சனிக்கிழமைகள், ஞாயிற்றுக்கிழமைகள், அரசாங்கத்தால் காலத்துக்குக்காலம் வெளிப்படுத்தப்பட்ட பொது விடுமுறை நாட்கள், வேறெந்த நாளிலும் பி.ப. 6 முதல் மு.ப. 6 வரையிலான காலம் என்பனவற்றில் எண்ணெய்ச் செய்துறைகளின் ஓரமாக நங்கூரம் பாய்ச்சிக் கிடந்த மரக்கலம் ஒன்று தொடர்பாக அறவிடப்படுதல் வேண்டும் :—

| | ரூ. ச. |
|---|---|
| ஒவ்வொரு ஆறு மணிக்கு அல்லது அதன் பகுதிக்கு .. .. .. .. | 25 0 |

(5) எண்ணெய்ச் செய்துறைகளின் ஓரமாக மரக்கலம் ஒன்று பறிப்பதற்கென அல்லது எரிபொருள் திரும்பப் பெறுவதற்கென நங்கூரமிடப்பட்டிருக்குமிடத்து, எண்ணெய்ச் செய்துறைக் கரைக்கு அல்லது அங்கிருந்து இறக்கப்பட்ட அல்லது ஏற்றப்பட்ட கப்பற் சரக்குப் பொதி ஒவ்வொன்றுக்கும் இருபது சத விகிதமான கட்டணம் ஒன்று அறவிடப்படுதல் வேண்டும்.

ஆயினும் எவ்விதமேனும், கொழும்புத் துறைமுக ஆணைக்குழுவினரின், துறைமுக ஆணையாளர், அத்தகைய கப்பற் சரக்கினைப் பறித்தல் அல்லது ஏற்றுதல் நியாயமற்ற வகையிற் சுணங்கிவிட்டதெனக் கருதினால் 2 ஆம் ஒழுங்குவிதியின் 2 ஆம் உப்பந்தியிற் குறிக்கப்பட்டுள்ள விகிதங்களின்படி தீர்மானிக்கப்படும் மேலதிகக் கட்டணம் ஒன்றினைப் பெற அதிகாரமளிக்கலாம்.

(6) துறைமுக ஆணைக்குழுவின் பாரந்தூக்கிகளை உபயோகிப்பதற்கான கட்டணங்கள்

1. கொழும்புத் துறைமுக ஆணைக்குழு வளவுக்குள் பாரந்தூக்கிகளை உபயோகித்தற்கான பின்வரும் கட்டணங்கள் அறவிடப்படுகின்றன :—

| விவரம் | | வழமையான வேலை நேரங்களுக்கான கட்டணம் |
|---|---|---|
| செப்பனிடு (பழுதுபார்) துறையினுள்ள 30 தொன் பயணஞ் செய்யும் நீராவிப் பாரந்தூக்கி, 30 தொன் செய்கரை, கொலியாத் பாரந்தூக்கி | விசேட தேவைகளுக்குக் கிடைப்பன | முதல் உயர்த்தற்கு ரூபா 200.00<br>அடுத்த உயர்த்தல் அதே நாளில் தொன் ஒன்றுக்கு அல்லது பாகத்துக்கு ரூபா 15.00 வீதம், ஆகக்கூடியது ரூபா 200.00 ஆகக் குறைந்தது 50 ரூபா ஒரு உயர்த்தலுக்கு அமைய, அத்துடன் காத்து நிற்கும் கட்டணம் கால் மணித்தியாலம் அல்லது அதன் பகுதிக்கு 10.00 வீதம் |
| 20 தொன் துறைமேடை மின்சாரப் பாரந்தூக்கி .. | | முதல் உயர்த்தலுக்கு ரூபா 100.00<br>அடுத்த ஒவ்வொரு உயர்த்தலுக்கும் முதல் உதர்த்தியுடன் 80.00 ரூபா, துணை உயர்த்தியுடன் 65 ரூபா, கால் மணி ஒவ்வொன்றிற்கும் அல்லது அதன் பகுதிக்கும் தயார் நிலைக் கட்டணமாக ரூபா 10 |
| 5 தொன் வரையுள்ள இயங்கும் பாரந்தூக்கிகள் .. | | மணிக்கு அல்லது பாகத்துக்கு ரூ. 20 |
| 5 தொன்னுக்கு மேற்பட்ட ஆனால் 15 தொன்னுக்கு உட்பட்ட பாரந்தூக்கிகள் | | மணிக்கு அல்லது பாகத்துக்கு ரூ. 30 |
| 15 தொன்னுக்கு மேற்பட்ட ஆனால் 25 தொன்னுக்கு உட்பட்ட பாரந்தூக்கிகள் | | மணிக்கு அல்லது பாகத்துக்கு ரூ. 35 |
| 25 தொன்னுக்கும் அதற்கு மேற்படவுமுள்ள பாரந்தூக்கிகள் | | மணிக்கு அல்லது பாகத்துக்கு ரூ. 40 |
| 5 தொன் வரையான நீராவிப் பாரந்தூக்கிகளும் மின்சார சரக்கு மேடைப் பாரந்தூக்கிகளும் | | மணிக்கு அல்லது பாகத்துக்கு ரூ. 17 |
| மேடையுருப் பாரந்தூக்கிகள் .. .. | | மணிக்கு அல்லது பாகத்துக்கு ரூ. 30 |

துறைமுக வளவுகளுள் துறைமுக வேலைக்கு வசதியளிப்பதொன்றாகப் பாரந்தூக்கிகள் உபயோகிக்கப்படுமிடத்து மட்டுமே மேற்கூறிய விகிதங்கள் ஏற்புடையனவாகும்.

அவ்வித வசதியொன்றாகவல்லாது வேறு வகையில் துறைமுக வளவுகளுள் தனிப்பட்ட திறத்தவர்களால் அவை உபயோகிக்கப்படுமிடத்து விகிதங்கள் மேற்றரப்பட்டவற்றின் இரு மடங்குகளாகும்.

துறைமுக வளவுகளுக்கு வெளியே அரசாங்கத் திணைக்களங்களாலும் அரசாங்க ஆதரவு பெற்ற கூட்டுத்தாபனங்களினாலும் பாரந்தூக்கிகள் உபயோகிக்கப்படின் வாடகை விகிதம் மேற்றரப்பட்டவற்றின் $1\frac{1}{2}$ மடங்குகளாகும்.

துறைமுக வளவுகளுக்கு வெளியே தனிப்பட்ட திறத்தவர்களால் பாரந்தூக்கிகள் பயன்படுத்தப்படின் வாடகை விகிதங்கள் மேற்கூறப்பட்டவற்றின் மும்மடங்குகளாகும்.

குறிப்பு.—(1) சனிக்கிழமைகளிலும், ஞாயிற்றுக்கிழமைகள், பொது விடுமுறை நாட்கள் அல்லது வேலை நாட்களில் வழமையான வேலை நேரங்களுக்குப் புறத்தான காலத்துக்கான வாடகைக் கட்டணம் வழமையான நேரங்களுக்கென மேற்குறிப்பிடப்பட்ட விகிதங்களின் இரு மடங்குகளாகும்.

(2) வேலையிடத்துக்குச் செல்வதற்கும், அங்கிருந்து திரும்புவதற்குமான காலத்திற்கு வாடகைக்கமர்த்துபவரிடமிருந்து கட்டணம் அறவிடப்படும்.

(3) விசேட தேவைகளுக்கு கிடைக்கக்கூடியன எனக் குறிப்பிடப்பட்ட இரண்டு 30 தொன் பாரந்தூக்கிகள் விடயத்திலும் 20 தொன் கலத்துறையோரப் பாரந்தூக்கியின் விடயத்திலும் வேலை எதிர்பார்த்து நிற்றற்கான கட்டணங்களை கணக்கிடும்போது, ஒவ்வொரு பாரமுயர்த்தலுக்குமென 30 நிமிட இலவச நேரம் ஒன்று விடப்படும்.

(4) பாரந்தூக்கிகளை வாடகைக்கமர்த்தல் தொடர்பில் இடப்பட்ட நிபந்தனைகளுக்கமையவே பாரந்தூக்கி வாடகைக்கு விடப்படும்.

பாரந்தூக்கிகள் பின்வரும் நிபந்தனைகளின்படி வாடகைக்கு விடப்படும் :—

**(1) வாடகைக்கமர்த்துவதற்கான விண்ணப்பங்கள்—**

(அ) வாடகைக்கமர்த்துவதற்கான விண்ணப்பங்கள் பக்தாத்துப் பிரதேசத்திலுள்ள பாரந்தூக்கி அலுவலகத்திலிருந்து பெறப்படக்கூடிய விதிக்கப்பட்ட படிவத்தில் துணையிதழ்ப் பிரதியுடன் செய்யப்படுதல் வேண்டும். இவை வாடகைக்கமர்த்துபவரால் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதியாற் கையொப்பமிடப்படுதல் வேண்டும்.

(ஆ) பந்தி (இ) என்பதிற் குறிப்பிடப்பட்டுள்ள பாரந்தூக்கிகள் தவிர்ந்த ஏனையவற்றுக்கான விண்ணப்பங்கள் யாவும் தேவைப்படும் அப்பாரந்தூக்கிகள் நிறுவப்பட்ட அவ்விடங்களுக்குரியவரான விடயத்துக்கேற்ப சாமான் துறைக் கண்காணிப்பாளர் (பாரந்தூக்கிகள்) அல்லது சாமான் துறைக் கண்காணிப்பாளர் (நிலக்கரித் தளங்கள்) என்பவர்களுக்கு முதலில் செய்யப்பட்டு அவை பாரந்தூக்கிகள் அலுவலகத்தில் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

(இ) செப்பனிடுதுறை மேடையில், 30 தொன் பயணஞ் செய்யும் நீராவிப் பாரந்தூக்கியை வாடகைக்கமர்த்துவதற்கான விண்ணப்பங்கள் ஏற்றியிறக்கற் துறை மேடை முகாரிக்குச் செய்யப்படுதல் வேண்டும். துறைமுக மேடையிலுள்ள 30 தொன் கொலியாத் பாரந்தூக்கிக்கெனவும், கப்பற்றுறை வேலைத்தளங்களுக்கும் செப்பனிதுறைக்குமிடையே பயணஞ் செய்யும் நீராவிப் பாரந்தூக்கிக்கெனவும் செய்யப்படும் விண்ணப்பங்கள் கண்காணிக்கும் எந்திரவியல் இஞ்சினியருக்குச் செய்யப்படுதல் வேண்டும்.

**(I) வழமையான (வேலை) நேரங்கள்—**

வழமையான வேலை நேரங்களுள் பாரந்தூக்கிகளை வாடகைக்கமர்த்துவதற்கான விண்ணப்பங்கள், பாரந்தூக்கி தேவைப்படும் நாளுக்கு முந்திய நாள் பி. ப. 2 மணி வரையும் பக்தாத்துப் பாரந்தூக்கி அலுவலகத்தில், அல்லது விடயத்திற்கேற்ப ஏற்றியிறக்குதுறை மேடை முகாரியின் அலுவலகத்தில் அல்லது கண்காணிக்கும் எந்திரவியல் இஞ்சினியரின் அலுவலகத்தில் ஏற்றுக் கொள்ளப்படும்.

இப்பந்தியில் "வழமையான வேலை நேரங்கள்" என்பது சனிக்கிழமைகள், ஞாயிற்றுக்கிழமைகள், பொது விடுமுறை நாட்கள் தவிர்ந்த நாட்களில் நண்பகல் 12 முதல் பி. ப. 12.30 வரையான அரை மணித்தியால இடைவேளையுடையதும் மு. ப. 7 மணி முதல் பி. ப. 4.30 வரையானதுமான காலப்பகுதி என்று பொருளாகும்.

**(II) வழமையான நேரங்கள் தவிர்ந்த நேரத்துள்—**

(அ) வழமையான கிழமை நாட்களில்—பாரந்தூக்கிகள் தேவைப்படும் நாள் பி. ப. 2.00 மணி வரையும் பக்தாத்துப் பாரந்தூக்கி அலுவலகத்தில், அல்லது விடயத்திற்கேற்ப, ஏற்றியிறக்கு துறை மேடை முகாரியின் அல்லது கண்காணிக்கும் எந்திரவியல் இஞ்சினியரின் அலுவலகத்தில் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(ஆ) சனிக்கிழமைகளிலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும், பக்தாத்துப் பாரந்தூக்கி அலுவலகத்தில் அல்லது விடயத்துக்கேற்ப ஏற்றியிறக்கு துறை மேடை முகாரியின் அல்லது கண்காணிக்கும் எந்திரவியல் இஞ்சினியரின் அலுவலகத்தில், பாரந்தூக்கிகள் தேவைப்படும் நாளன்று பி. ப. 12.30 வரையும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

(இ) விடுமுறை நாட்களில் : பக்தாத்துப் பாரந்தூக்கி அலுவலகத்தில் அல்லது விடயத்துக்கேற்ப ஏற்றியிறக்குதுறை மேடை முகாரியின், அல்லது கண்காணிக்கும் எந்திரவியல் இஞ்சினியரின் அலுவலகத்தில் அவ்விடுமுறை நாளுக்கு முந்திய நாள் பி. ப. 1.30 வரையும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

**(2) பாரந்தூக்கிகளை ஒதுக்குதல் :**

(அ) பாரந்தூக்கிகளை வழங்குவதற்கும், அவை வாடகைக்கமர்த்தப்பட்டிருக்கக்கூடிய காலத்தினை மட்டுப்படுத்துவதற்கும் ஆன உரிமையைக் கொழும்புத் துறைமுக ஆணைக்குழு தனக்கே தனியாக்கியுள்ளது.

(ஆ) எந்தப் பாரந்தூக்கியையேனும், எவ்விண்ணப்பக்காரனுக்கேனும் எந்நேரத்திலேனும் வழங்குவதற்குக் கொழும்புத் துறைமுக ஆணைக்குழு கட்டுப்பட்டதன்று.

(இ) கொழும்புத் துறைமுக ஆணைக்குழு, துறைமுகத்தின் நெருக்கடி நிலை அவ்விதம் தேவைப்படுத்தினால், பாரந்தூக்கிகளை மீள ஒதுக்கலாம் அல்லது எவரேனும் வாடகைக்கமர்த்தியவரிடமிருந்து பாரந்தூக்கியை அகற்றலாம்.

**(3) மாற்றங்களும் நீக்கங்களும் :**

(அ) கோரிக்கைப் பதிவுகளுக்கான மாற்றம் அல்லது அவற்றின் நீக்கம் எதுவும், வாடகைக்கமர்த்துபவருக்கு எவ்வித செலவுமின்றி, மேலேயுள்ள பந்திகள் 1 (1), 1 (2) (அ), (ஆ), இ) என்பவற்றிற் குறிப்பிடப்பட்ட அந்நேரம் வரையும் ஏற்றுக் கொள்ளப்படும் ஆனால் அத்தகைய நேரங்களின் பின்னர், எத்தகைய மாற்றமோ நீக்கமோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. வாடகைக்கு அப்பாரந்தூக்கிகள் பதிவு செய்யப்பட்டிருந்த காலத்துக்கு, அவை உபயோகிக்கப்படினும், படாவிடினும், முழுக் கட்டணமும் அவ்வாடகைக்கமர்த்தியவரிடமிருந்து அறவிடப்படும்.

(ஆ) அத்தகைய மாற்றங்கள் நீக்கங்கள் யாவும் எழுத்தில் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(இ) வழமையான நேரங்களுக்கெனவும், மேலதிக நேரத்துக்கெனவும் வாடகைக்கெனப் பதியப்பட்ட பாரந்தூக்கிகள் தொடர்பில் தனித்தனி நீக்கற் கட்டளைகள் செய்யப்படல் வேண்டும்.

**(4) வாடகைக்கமர்த்திய காலங்களின் நீட்டங்கள் :**

பாரந்தூக்கிகள் அவை முன்னர் கோரப்பட்ட காலங்களுக்கு மேற்பட்ட காலங்களுக்குத் தேவைப்படின், அதற்கான மேலதிக விண்ணப்பங்கள், வழமையான நேரங்களிலாயின் முன்னைய விண்ணப்பத்திற் குறிப்பிடப்பட்ட காலம் முடிவடைதற்கு ஆகக் குறைந்தது ஒரு மணி நேரம் முன்னரும், மேலதிக வேலை நேரத்திலாயின் பி. ப. 9 மணிக்கு முன்னரும் செய்யப்படுதல் வேண்டும்.

**(5) கட்டணங்கள் செலுத்துதல் :**

(அ) போதிய முற்பணம் ஒன்று முன்னரே கொழும்புத் துறைமுக ஆணைக்குழுவின் கணக்காளரால் விண்ணப்பக்காரனிடமிருந்து பெறப்படினன்றி, அமய பயன்படுத்துவார் எவருக்கும் பாரந்தூக்கி வழங்கப்படலாகாது.

(ஆ) பாரந்தூக்கிகளை வழக்கமாக வாடகைக்கமர்த்துவார்க்கு மேற்சொல்லப்பட்ட பணிப்பு ஏற்புடையதாகாது. அவர்கள் விடயத்தில், அவர்கள் வரவுக் கணக்கில் கொழும்புத் துறைமுக ஆணைக் குழுவிடம் அவர்களுக்குச் செல்மதியாகக் கிடக்கும் தொகையின் அளவுக்குப் பாரந்தூக்கிகளை வாடகைக்கமர்த்த விடப்படுவர்.

(6) வாடகைக்கமர்த்துபவரின் பொறுப்பு :

(அ) பாரந்தூக்கியினதும் அதன் பணியாட்களினதும் பாதுகாப்புக்கு வாடகைக்கமர்த்துபவரே பொறுப்பாவர். அவருக்கு வாடகைக்கு விட்டிருந்த காலத்தில் அப்பாரந்தூக்கியைக்கப்படுவதனல் எழக்கூடிய ஆட்களுக்கு அல்லது பொருள்களுக்கான இழப்பு, நட்டம் (சேதம்) கோரிக்கை எதற்கும் கொழும்புத் துறைமுக ஆணைக்குழுவுக்கு நட்டஈடு செலுத்துதல் வேண்டும். குறிப்பிட்ட பாரந்தூக்கிக்கு ஏற்புடையவையான பாதுகாப்பு, பாரவளவு, ஒழுங்கு விதிகளுக்குத் தாம் அல்லது தமது முகவரி திட்டவட்டமாக அமைந்தொழுகுவார் என்பதனை வாடகைக்கமர்த்துபவர் உறுதி செய்து கொள்ளல் வேண்டும்.

(ஆ) அமைப்பு, எந்திரவியல், மின்சார அல்லது இயந்திரப் பிழைபாட்டினல் அல்லது எவ்வகையான காரணத்தினல் எழக்கூடிய ஏதேனும் கணக்கத்திற்கு அல்லது அதன் விளைவுகளுக்குக் கொழும்புத் துறைமுக ஆணைக்குழு பொறுப்புடையதாகமாட்டாது.

(இ) பாரந்தூக்கியைச் செலுத்துபவர், வாடகைக்கமர்த்துபவரின் பணிப்புகளை நிறைவேற்றுதல் வேண்டும். ஆனல் வாடகைக்கமர்த்து பவரால் பாதுகாப்பான, தகுந்த முற்காப்பு நடவடிக்கைகள் கையாளப்படவில்லை எனச் செலுத்துபவர் கருதினல் அவர் வேலை செய்ய மறுக்கலாம்.

(7) பாரந்தூக்கிகளின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்கான முற்காப்பு நடவடிக்கைகள் :—

(அ) குறிப்பிட்ட செயற்பாட்டாரைக்குரிய பாரந்தூக்கியின் பாதுகாப்பான தொழிற்பாட்டுப் பாரத்துக்கு, எந்த உயர்த்தலும் மேற்படுதலாகாது ;

(ஆ) பாரந்தூக்கியின் கை அவற்றின் மேலே செங்குத்தாக வீசப்படக்கூடிய வீதமாகப் பாரஞ்சாம்பிக் கவண்கள் தடைகளுட்படாவாறு தக்க நிலையில் வைக்கப்படல் வேண்டும்.

(8) விசேட தேவைகளுக்கு கிடைக்கக்கூடியதான நீராவிப் பாரந்தூக்கி ஒன்றுகப் பதியப்பட்டிருந்த, எவ்வித உயர்த்தலுமின்றி அக்கட்டளையாவது நீக்கப்படின், அந்தக் குறிப்பிட்ட பாரந்தூக்கிக்கான முதல் உயர்த்துக்கென விதிக்கப்பட்ட கட்டணத்துக்குச் சமமான கட்டணம் அறவிடப்படும். அத்துடன் ஏதேனும் வேலை எதிர்பார்த்து நிற்கும் காலமும் இருப்பின் அதற்கும் கட்டணம் அறவிடப்படும்.

(9) ஒரு " உயர்த்து " என்பது பாரத்தினைச் செம்மையாக அமைபதனைப் பற்றிக் கருத்திற் கொள்ளாது, வள்ளம் அல்லது மரக்கலமொன்றிலிருந்து கரைக்கு அல்லது மரக்கலங்களுக்கு அல்லது நிலத்திலிருந்து ஊர்தி ஒன்றுக்கு அல்லது மறுதலையாக, ஒரு தாக்கான கப்பற் சரக்கை அல்லது பொதிகளை உயர்த்துவதனை அடக்கும்.

நானுவிதமானவை

இந்த அத்தியாயத்தில் —

(i) " விடுமுறைகள் " என்பது சனிக்கிழமைகள், ஞாயிற்றுக்கிழமைகள், அரசாங்கத்தால் காலத்துக்கு காலம் வெளிப்படுத்தப்படும் விடுமுறை நாட்கள் யாவும் என்று பொருளாகும்.

வேறு விதமாகக் கூறப்பட்டாலன்றி,

(ii) கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு தொடர்பில் " வழமையான வேலை நேரங்கள் " என்பது வேறு விதமாகக் கூறப்பட்டாலன்றி, மு. ப. 7.00 முதல், ந. ப. 12.00 வரையும் பி. ப. 12.30 முதல், பி. ப. 4.30 வரையுமுள்ள காலம் என்ற பொருளாகும்.

**(7) கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு—நீராவி இயந்திரங்கள் முதலியன**

1. பாதை மாற்றல், திருப்பல் (சண்டிங்) அல்லாத நோக்கங்களுக்கு நீராவியந்திரங்களைப் பயன்படுத்துவதற்கான கட்டணங்கள் :

| | | ரூ. | ச. |
|---|---|---|---|
| (அ) வழமையான வேலை நாட்களில் 6 மணிகள் கொண்ட ஒரு காலத்துக்கு அல்லது அதன் பகுதிப்பு | .. | 140 | 0 |
| 6 மணிகளுக்கு மேற்பட்டும் 12 மணிகளுக்கு மேற்படாமலுள்ள ஒரு காலத்திற்கு | .. | 280 | 0 |
| 12 மணித்தியாலங்களுக்கு மிகையான மேலதிக மணித்தியாலம் ஒன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு | .. | 25 | 0 |

சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை காலத்துக்குக் காலம் அரசாங்கத்தினல் வெளிப்படுத்தப்பட்ட விடுமுறை நாட்கள். வழமையான வேலை நாட்களில் திணைக்களத்தின் வழமையான வேலை நேரங்களுக்கப்பாலான காலங்கள் என்பவற்றுக்கான கட்டணங்கள் மேலே (அ) விற் குறிப்பிடப்பட்ட கட்டணங்கள் 100 சதவிகிதத்தினல் அதிகரிக்கப் பட்டனவாகும்.

2. பாதை மாற்றல், திருப்பல் (சண்டிங்) வேலைகளுக்கான் கட்டணங்கள்—

ஒரு முறைக்கு ரூபா 60 அத்துடன், வேலைநேரங்களுக்குப் புறம்பான காலங்களிலும் சனிக்கிழமைகளும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலத்துக்குக் காலம் அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட விடுமுறை நாட்களிலும் ஆன வேலைக்கு 100 சதவிகிதம் கூட்டப்படுதல் வேண்டும்.

3. சாமான் வண்டிகள், தூறலிகள், ட்ரக் என்பவற்றினை உபயோகித்தற்கான கட்டணங்கள் ஒன்றுக்கு—நாளொன்றுக்கு அல்லது அதன் பாகத்துக்கு ரூபா 30.

**(8) இயந்திர உபகரணங்கள்**

| பொறித் தொகுதி | | வழமையான வேலை நேரங்களுக்கான கட்டணங்கள் ரூ. | ச. |
|---|---|---|---|
| (டீசலினற் செலுத்தவல்ல) இரு வழி அள்ளி—ஒரு மணித்தியாலம் அல்லது அதன் பகுதிக்கு | .. | 20 | 0 |
| (பெற்றோலினற் செலுத்தவல்ல) குப்பை வீசி—ஒரு மணித்தியாலம் அல்லது அதன் பகுதிக்கு | .. | 20 | 0 |
| (பெற்றோலினற் செலுத்தவல்ல) ஒரு மோட்டார் இழுவையும் ஆறு தொடரிகளும்—ஒரு மணித்தியாலம் அல்லது அதன் பகுதிக்கு | .. | 10 | 0 |
| (பெற்றோலினற் செலுத்தவல்ல) முள்ளுருப் பாரவண்டி—ஒரு மணித்தியாலம் அல்லது அதன்பகுதிக்கு | | 15 | 0 |
| (மின்கலத்தாற் செலுத்தவல்ல) டீசலினல் செலுத்தவல்ல முள்ளுருப் பாரவண்டி—ஒரு மணித்தியாலம் அல்லது அதன் பகுதிக்கு | .. | 10 | 0 |
| (மின்கலத்தாற் செலுத்தவல்ல) மேடைப்பாரவண்டி—ஒரு மணித்தியாலம் அல்லது அதன் பகுதிக்கு | | 6 | 0 |
| (மின்சாரத்தாற் செலுத்தவல்ல) சிப்பந்தூக்கி—ஒரு மணித்தியாலம் அல்லது அதன் பகுதிக்கு | .. | 10 | 0 |
| (மண்ணெண்ணெயினல் செலுத்தவல்ல) தள்ளிச் செலுத்தி—ஒரு மணித்தியாலம் அல்லது அதன் பகுதிக்கு | .. | 10 | 0 |
| (மின்சாரத்தற் செலுத்தவல்ல) தள்ளிச் செலுத்தி—ஒரு மணித்தியாலம் அல்லது அதன் பகுதிக்கு | .. | 5 | 0 |

குறிப்பு.—வழமையான வேலை நேரங்களுக்கப்பாலும் சனிக்கிழமைகளிலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும் பொது விடுமுறை நாட்களிலும் செய்யப்படும் வேலைக்கு இவ்விகிதம் 100 சத விகிதத்தினால் அதிகரிக்கப்படும்.

ஏனைய சாதனங்களின் வாடகைக்கமர்த்தற் கட்டணங்கள் கப்பற்றுறை ஆணையாளரால் நிர்ணயிக்கப்படும்.

**(9) கொச்சிக்கடையிலுள்ள நிலக்கரித் தளங்களில் இயந்திரத்தால் நிலக்கரியைக் கையாளல் செய்யும் பொறித்தொகுதி கொண்டு கனிக்கல் (ஜிப்சம்) கையாளல்**

தொன் ஒன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கான கையாளற் கட்டணம்—ரூபா 7.

வழமையான வேலை நேரங்களுக்கப்பாலும் சனிக்கிழமைகளிலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும், பொது விடுமுறை நாட்களிலும் செய்யப்படும் வேலைக்கு இவ்விகிதம் 100 சத விகிதத்தினால் அதிகரிக்கப்படும்.

கவ்விகளையும் அவற்றைக் கவனிப்பதற்கான குழும்பையும் வழங்குவதற்கு அத்தகைய சேவைகள் பயன்படுத்தப்படுமிடத்து, கூடுதலான கட்டணமொன்று அறவிடப்படும்.

குறிப்பு.—இவ்விகிதங்கள், துறைமுகச் (சரக்குக்) கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படவேண்டிய வழக்கமான வாடகை அல்லது வேறு கட்டணங்கள் எவற்றையும் உள்ளடக்கியன அல்ல.

**(10) இயந்திரத்தால் நிலக்கரியைக் கையாளல்**

கீழ்த் திறக்கும் பேழை வாயிலாக நிலக்கரியைக் கையாளுவதற்குத் தொன் ஒன்றுக்கு அல்லது அதன் பாகத்திற்கு ரூ. 8.50 சத வீதமான கட்டணம் ஒன்று அறவிடப்படும். வழமையான வேலை நேரங்களுக்கப்பாலும் சனிக்கிழமைகளிலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும், பொது விடுமுறை நாட்களிலும் செய்யப்படும் வேலைக்கு இவ்விகிதம் 100 சத விகிதத்தினால் அதிகரிக்கப்படும்.

குறிப்பு.—இவ்விகிதங்கள், துறைமுகச் (சரக்குக்) கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படவேண்டிய வழக்கமான வாடகை அல்லது வேறு கட்டணங்கள் எவற்றையும் உள்ளடக்கியன அல்ல.

**(11) மணற் பரவல்**

கொழும்புத் துறைமுகத்தில் எளிதில் தீப்பற்றக்கூடிய கனிப்பொருள் இறக்குமதி செய்யப்படவேண்டின், அத்தகைய பொருளை இறக்குவதன் நோக்கத்துக்கெனத் தேவையான ஒரு அங்குலத் தடிப்பாக மணல் பரப்புவதற்கென, ஒவ்வொரு நூறு சதுர அடிக்கு அல்லது அதன் பாகத்திற்கு ரூ. 7.50 சத வீதமாகக் கணக்கிடப்படும் கட்டணம் ஒன்று, துறைமுக ஆணையாளரால் அறவிடப்படும்.

**(12) ஏரிக்கும் கப்பற்றுறைக்குமிடையிலான கால்வாய்த் தடைகள்**

கலங்களின் சொந்தக்காரரின் வேண்டுகோளின் மீது, போக்குவரத்துக்கென ஏரிக்கும் கப்பற்றுறைக்குமிடையே உள்ள தடைகளைத் திறந்து வைத்திருத்தற்குப் பின்வரும் கட்டணங்கள் அறவிடப்படும் :—

| | ஒரு முறை கோருவதற்கு ரூ. ச. |
|---|---|
| (1) சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை, பொது விடுமுறை நாள் தவிர்ந்த நாட்களில் மு. ப. 7.00 முதல், பி. ப. 10.00 வரை .. | இலவசம் |
| (2) சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை, பொது விடுமுறை நாட்களில் மு. ப. 7.00 முதல், பி. ப. 10.00 வரை ஒவ்வொரு 8 மணி அல்லது பாகத்திற்கு .. .. .. .. .. .. .. | 80 0 |
| (3) சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை, பொது விடுமுறை உட்பட எல்லா நாட்களிலும் பி. ப. 10.00 முதல் மு. ப. 7.00 வரை அல்லது அதன் பாகத்திற்கு .. .. .. .. .. .. | 80 0 |

தடைகளைப் பயன்படுத்தவென ஒருவருக்கு மேற்பட்டோர் விண்ணப்பிக்குமிடத்து, அத்தடைகளைப் பயன்படுத்தும் கலங்களின் எண்ணிக்கையை பொருட்படுத்தாது விண்ணப்பித்தவர்களுக்கிடையே கட்டணம் சம்மாகப் பகிரப்படுதல் வேண்டும்.

குறிப்பு.—சாந்த சபத்தியன் தடைகளைப் பயன்படுத்துவதற்குரிய கட்டணம் ஆயக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கினவாக இருத்தல் வேண்டும்.

**(13) சங்கிலிகளைப் பரீட்சித்துப் பார்த்தல்**

½ அங்குல அதன் மேற்பட்ட விட்டமுள்ள சங்கிலி ஒன்றைப் பரீட்சித்துப் பார்த்தற்கான கட்டணம்—

| | ரூ. ச. |
|---|---|
| ஒரு முறை பரீட்சிப்பதற்கு .. .. .. .. .. .. | 85 0 |
| சங்கிலி ½ அங்குல விட்டத்துக்குக் குறைந்ததாயின் 3 பரீட்சைகளுக்கு அல்லது குறைய .. | 45 0 |

பரீட்சித்தல் வழமையான வேலை நாட்களிலும், வழமையான வேலை நேரங்களிலும் மட்டுமே செய்யப்படும். சங்கிலி பிரதான இஞ்சினியரின் வேலைத்தளத்தில், கொதிபேழை இஞ்சினியரிடம் ஒப்படைக்கப்பட்டு அவரிடமிருந்து பெறப்படுதல் வேண்டும்.

**(14) வானொலி, தொலைபேசி உபகரணம்**

1. உள்ளூர் அழைப்புக்கள் தொடர்பிலான கட்டணம் அவ்வுபகரணம் உபயோகிக்கப்படும் ஒவ்வொரு நாளுக்கு அல்லது அதன் பாகத்துக்கு ரூபா 15 வீதமானதாதல் வேண்டும்.

2. வெளியிட அழைப்புகள் தொடர்பில் (192 ஆம் அத்தியாயமான) தொலைபேசித் தொடர்புக் கட்டளைச் சட்டத்தின் கீழாக்கப்பட்ட ஒழுங்கு விதிகளில் குறிப்பிடப்பட்ட வெளியிட அழைப்புகளுக்கான விகிதங்களுக்கிணங்கவுள்ள மேலதிக கட்டணம் ஒன்றும் அறவிடப்படும்.

3. திரிகோணமலை, காலி கப்பற்றுறைகளுக்கென அறவிடப்படும் கட்டணங்கள் கொழும்பு கப்பற்றுறைக்கானவையேயாகும்.

குறிப்பு.—(அ) வேலைத் தளங்களிலிருந்து உபகரணங்களை எடுத்துச் செல்வதற்கும் மீண்டும் கொணர்ந்து சேர்ப்பதற்குமான ஏற்பாடுகளை வாடகைக்கமர்த்துபவரே தமது செலவிற் செய்தல் வேண்டும்.

(ஆ) உபகரணம் அகற்றப்பட்ட நேரத்திலிருந்து மீண்டும் ஒப்படைக்கப்படும் நேரம் வரையினும் உபகரணத்துக்கு ஏற்படும் எந்தவித நட்டத்துக்கும் வாடகைக்கமர்த்துபவரே பொறுப்பாளியாவர்.

(இ) அமய பயன்படுத்துபவர் விடயத்தில், அவ்வாடகைக்கமர்த்துபவரிடமிருந்து போதிய தொகை முற்பணமாகத் துறைமுக ஆணைக் குழுவின் கணக்காளரால் முன்னரே பெறப்பட்டால் மட்டுமே, இவ்வுபகரணம் அவர்களுக்கு வழங்கப்படும்.

(ஈ) மேலே (இ) யிற் குறிப்பிடப்பட்ட நிபந்தனை வழக்கமாக இவ்வுபகரணத்தை வாடகைக்கமர்த்துபவர்களுக்கு ஏற்புடையதாகாது. அவர்கள் தமக்கு வருமதியாகக் கொழும்புத் துறைமுக ஆணைக் குழுவினுடனுள்ள தமது கணக்கிலிருக்கும் தொகை வரைக்கும் இவ்வுபகரணத்தை வாடகைக் கமர்த்த அனுமதிக்கப்படுவர்.

## (15) சுளியோடும் கட்டணங்கள்

துறைமுக ஆணைக்குழுவின் சுளியோடிகளின் சேவைகளுக்கான கட்டணங்கள் :—

| | கப்பற் றுறையுள் ரூ. | ச. | கப்பற் றுறைக்கு வெளியே ரூ. | ச. |
|---|---|---|---|---|
| வேலை நேரங்களில், ஒரு வேலை நேரத்துக்கு அல்லது பகுதிக்கு .. .. | 375 | 0 .. | 555 | 0 |
| வேலைநேரங்களுக்குப் புறம்பாகவும் சனிக்கிழமைகளிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் பொது விடுமுறை நாட்களிலும் .. .. .. .. | 750 | 0 .. | 1,110 | 0 |

கப்பற்றுறைக்கு வெளியேயான சேவையின் விடயத்தில் சுளியோடி உண்மையாகச் சுளியோடாதிருக்கும் ஏதேனும் காலத்துக்கு, உரிய கட்டணத்தின் 50 சதவீதம் மட்டுமே செலுத்தப்படுதல் வேண்டும்.

குறிப்பு.—மேற்சொன்ன கட்டணங்களின் நோக்கங்களுக்கென ஒரு வேலைநேரம் என்பது 4 மணித்துளிக்குச் சமமானதாகும்.

கப்பற்றுறை வசதியென்றல்லாது சுளியோடியின் சேவைகள் பயன்படுத்தப்படுமிடத்து கப்பற்றுறைக்கு வெளியே குறித்துரைக்கப்பட்ட கட்டணங்கள் 50 சதவீத மேலதிகக் கட்டணத்துடன் பொருத்தமுடையதாகும்.

## (16) பொது

துறைமுகத் தீயணைக்கும் படையின் சேவைகளுக்கான கட்டணங்கள் பின்வருமாறு :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| (i) கரையிலேற்படும் தீ | | |
| வருகைக்கு .. .. .. .. .. .. .. | 260 | 0 |
| பயன்படுத்தப்படும் இயந்திரப் பம்பி ஒவ்வொன்றுக்கு முதல் மணிக்கு அல்லது அதன் பகுதிக்கு .. | 130 | 0 |
| மேலதிக மணி ஒவ்வொன்றுக்கும் அல்லது அதன் பகுதிக்கு நீர்ப்பெரு குழாய் மாத்திரம் ஒவ்வொன்றுக்கு .. | 105 | 0 |
| கண்காணிப்பாளர்—மணிக்கு அல்லது பகுதிக்கு .. .. .. | 25 | 0 |
| நிலைய அலுவலர்—மணிக்கு அல்லது பகுதிக்கு .. .. .. .. | 16 | 0 |
| பிரிவு அலுவலர்—மணிக்கு அல்லது பகுதிக்கு .. .. .. | 10 | 0 |
| வேறு தரத்தினர்—ஒவ்வொருவருக்கும் மணிக்கு அல்லது பகுதிக்கு .. .. .. | 6 | 0 |
| காவற் பணிகளுக்கு— | | |
| வேறு தரத்தினர்—ஒவ்வொருவருக்கும், மணிக்கு அல்லது பகுதிக்கு .. .. | 4 | 0 |
| (ii) (செப்பனிதுறை உட்பட) கப்பலில் ஏற்படும் தீ | | |
| வருகைக்கு .. .. .. .. .. .. .. | 260 | 0 |
| பயன்படுத்தப்படும் இயந்திரப் பம்பி ஒவ்வொன்றுக்கு—முதல் மணிக்கு அல்லது அதன் பகுதிக்கு .. | 170 | 0 |
| மேலதிக மணி ஒவ்வொன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு .. .. .. | 130 | 0 |
| கண்காணிப்பாளர்—மணி ஒவ்வொன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு .. .. .. | 25 | 0 |
| நிலைய அலுவலர்—மணி ஒவ்வொன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு .. .. .. | 16 | 0 |
| பிரிவு அலுவலர்—மணி ஒவ்வொன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு .. .. .. | 10 | 0 |
| வேறு தரத்தினர்—ஒவ்வொருவருக்கும் மணி ஒவ்வொன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு .. | 6 | 0 |
| காவற் பணிகள்— | | |
| வேறு தரத்தினர்—ஒவ்வொருவருக்கும் மணி ஒவ்வொன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு .. | 4 | 0 |
| (iii) மீட்பு வேலைகள்— | | |
| வருகைக்கு .. .. .. .. .. .. .. | 260 | 0 |
| பயன்படுத்தப்பட்ட ஒவ்வொரு இயந்திரப் பம்பிக்கும்—முதல் மணிக்கு அல்லது அதன் பகுதிக்கு .. | 130 | 0 |
| மேலதிக மணி ஒவ்வொன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு .. .. .. | 105 | 0 |
| இயந்திரம் பேணுவதற்கும் பணியாட்களுக்கும்— | | |
| முதல் மணிக்கு அல்லது அதன் பகுதிக்கு .. .. .. .. | 85 | 0 |
| மேலதிக மணி ஒவ்வொன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு .. .. .. | 55 | 0 |

மீட்பு வேலை பயன் வாய்ந்ததாகுமிடத்து, மேலே (iii) இற் குறிப்பிடப்பட்ட கட்டணத்தின் மேல் 50% மேலதிகக் கட்டணமும் அறவிடப்படும்.

ஏனைய நானாவித வேலைகளுக்கு மேலே (iii) இல் குறித்துரைக்கப்பட்ட கட்டணங்களில் 50% மேலதிகக் கட்டணம்.

## (17) நோயாளர் வண்டியாகப் பயன்படுத்தப்படும் இயந்திர வள்ளம்

அரசாங்க இலாஞ்சுகளைப் பயன்படுத்துவதற்கான அதே வாடகைக்கமர்த்தற் கட்டணங்கள் அறவிடப்படும்.

ஆயினும் தொற்றுநோய்த் தடை, நோய்த் தவிர்ப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகளுக்கிணங்க ஆட்களை, சாமான்களை அல்லது பொருட்களை எடுத்துச் செல்லுவதற்கென எவ்விதக் கட்டணமும் அறவிடப்படுதலாகாது.

மரக்கலங்கள் வந்தடைதல், புறப்படுதல் பற்றிய ஏதேனும் தனிச் செய்தியை அனுப்புவதற்கான கட்டணம் பின்வருமாறு :—

(அ) ஏதேனும் வணிகக் குழுவுக்கு அல்லது தனிப்பட்டவருக்கு செய்திகளை வழக்கமாக அனுப்ப மாதா வீதம் ரூபா 7.50 ;

(ஆ) கொழும்பிலுள்ள ஏதேனும் வணிகக் குழுவிற்கு அல்லது தனிப்பட்டவருக்கு ஒரு செய்தியனுப்ப செய்தியொன்றுக்கு ரூபா 1.0 வீதம்

(இ) 3 மைல் தூரத்திற்கப்பாலும் மாநகர எல்லையுள்ளும் உள்ள ஏதேனும் வணிகக் குழுவுக்கு அல்லது தனிப்பட்டவருக்கு ஒரு செய்தியை அனுப்ப செய்தியொன்றுக்கு ரூபா 2.50 வீதம்

### (18) புகையூட்டல்

புகையூட்டற் கட்டணங்கள் பின்வருமாறு :—

கொக்கோ

(1) வழக்கமான கிழமை தோறுன புகையூட்டல்—

(அ) 140 இறுத்தல் கொக்கோவுக்கு மேற்படாத பை ஒவ்வொன்றுக்கு ரூபா 1.10 சத வீதம்.
(ஆ) மேலதிக ஒவ்வொரு 28 இறுத்தலுக்கு அல்லது அதன் பாகத்து கு 15 சத வீதம்.

(2) அவசரமான புகையூட்டல்—

கப்பற்படுத்துபவர் ஒருவரின் வேண்டுகோளின்மீது வழக்கமான கிழமை தோறும் புகையூட்டும் நாள் தவிர்ந்த வேறொரு நாளில் செய்யப்படும் அவசரமான புகையூட்டல், புகையூட்டும் அறையின் கொள்ளும் திறனின் 75 சத வீதமான ஆகக்குறைந்த கட்டணத்துக் கேனும் அல்லது அவ்வறையைப் பயன்படுத்துவதற்கெனக் குறிப்பிடப்பட்ட விகிதத்தின் 75 சத வீதமோ எது கூடியதோ அதற் கமைந்ததாதல் வேண்டும்.

| அறை இல. | பல்வகைப் பண்டங்கள்—140 இரு. அல்லது குறைந்த பைகளில் இயல்பான கொள் திறன் | விகிதம் ரூ. ச. |
|---|---|---|
| 1 | 384 | 325 0 |
| 2 | 1,008 | 850 0 |
| 3 | 1,008 | 850 0 |
| 4அ | 40 | 35 0 |
| 4ஆ | 80 | 65 0 |
| 4இ | 2 | 2 0 |

இலகுவான பொதிகள், பொருட்டொகுதியின் பாகமான அமையாததும், 10 கன அடிக்கு மேற்படாததும் ரூ. 2.

ஆயினும் தனிப் பொதிகள்—

(அ) தகுந்த இடவாய்ப்பு இருப்பின்,
(ஆ) வேறு பொருள்களுடன் சேர்த்துப் புகையூட்டப்படக்கூடியதாயுமிருப்பின் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

அங்கீகாரம் பெற்ற அதிகாரி ஒருவரால் விடுக்கப்பட்ட ஏதேனும் அறிவித்தலின் கீழ்ச் செலுத்தப்படவேண்டிய எவையேனும் மேலதிகக் கட்டணங்களை மேற்றந்த விகிதங்கள் உள்ளடக்கியனவல்ல.

### (19) நல்ல நீர்

1. செப்பனிடுதுறை. வழிகாட்டிப்பாலம், எண்ணெய்துறை என்பவற்றில் மரக்கலங்களுக்கு நல்ல நீர் வழங்குவதற்கென 1,000 கலனுக்கு அல்லது அதன் பகுதிக்கு ரூபா 14 வீதமறவிடப்படும்.

2. பொது எண்ணெய் வசதிகளுக்கான குழாய்களைக் கழுவுவதற்கென நல்ல நீர் வழங்குவதற்கு 1,000 கலனுக்கு அல்லது அதன் பகுதிக்கு ரூபா 1.50 சத வீதமான கட்டணம் ஒன்று அறவிடப்படும்.

### (20) பிரிச்மன் இறுக்கி

ஒன்றிலிருந்து ஐந்து தொன் வரையிலான பிரிச்மன் இறுக்கியை வாடகைக்குக் கொடுப்பதற்காக நாளொன்றுக்கு அல்லது பகுதிக்கு ரூபா 100 வீதமான கட்டணமொன்று துறைமுக ஆணையாளரால் அறவிடப்படும்.

குறிப்பு.—(அ) வேலைத் தளத்திலிருந்து எடுத்துச் செல்வதற்கும் மீளவும் கொணர்வதற்கும், வாடகைக்கமர்த்துபவர் தம் செலவில் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

(ஆ) நிறுவுவதற்கும் அகற்றுதற்குமான செலவு வாடகைக்கமர்த்துபவராற் பொறுக்கப்படுதல் வேண்டும்.

### (21) நிறுக்கும் பாலம்

கொழும்புத் துறைமுகத்தில் கொச்சிக்கடையிலுள்ள நிறுக்கும் பாலத்தினை உபயோகிப்பதற்கு ஒவ்வொரு இருப்புப்பாதைச் சாமான் வண்டிக்கும் ரூபா 3 வீதத்தில் கணக்கிடப்படும் கட்டணம் ஒன்று துறைமுக ஆணையாளரால் அறவிடப்படும்.

### (22) உலொறிகளை வாடகைக்கமர்த்தல்

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுவின் உலொறிகளுக்கான வாடகைக் கட்டணங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும் :—

(i) 3 தொன்களுக்குட்பட்ட உலொறிகளின் வாடகைக்கமர்த்தற் கட்டணங்கள் மணித்தியாலம் ஒன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு ரூபா 15, அத்துடன் மைல் ஒன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு ரூபா 5 ஆகும்.

(ii) 3 தொன்கள் முதல் 5 தொன்கள் வரையான உலொறிகளின் வாடகைக்கமர்த்தற் கட்டணங்கள் மணித்தியாலம் ஒன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு ரூபா 20, அத்துடன் மைல் ஒன்று கு அல்லது அதன் பகுதிக்கு ரூபா 6 ஆகும்

(iii) 5 தொன்கள் முதல் 8 தொன்கள் வரையான உலொறிகளின் வாடகைக்கமர்த்தற் கட்டணங்கள் மணித்தியாலம் ஒன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு ரூபா 25, அத்துடன் மைல் ஒன்று கு அல்லது அதன் பகுதிக்கு ரூபா 7 ஆகும்.

8 தொன்னுக்கு மேற்பட்ட உலொறிகளுக்கான விசேட வாடகைக்கமர்த்தற் கட்டண வீதம் கப்பற்றுறை ஆணையாளரால் நிர்ணயிக்கப்படும்.

வெளி ஆட்களிடமிருந்து மேற்கூறப்பட்ட கட்டணங்களின் ஒன்றரை மடங்கான கட்டணங்கள் அறவிடப்படும்.

### (23) வேறு மிதக்கும் கலங்களை வாடகைக்கமர்த்துதல்
(9 மணிகளைக் கொண்ட நாளொன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு)

(இப்பொறித் தொகுதி வழக்கமான வாடகைக்குக் கிடைக்கக்கூடியதாகவிரா, விசேட சூழ்நிலைகளில், பிரதான இஞ்சினியரால் அவை தரப்படலாம் எனக் காணப்படின் வாடகைக்கு விடுதல் ஆலோசிக்கப்படும்).

வேறு மிதக்கும் கலங்களுக்கான வாடகைக் கட்டணங்கள் பின்வருமாறு :—

| பொறித் தொகுதி | ரூ. ச. |
|---|---|
| 10 தொன் அகழ்வான் | 1,750 0 |
| 5 தொன் அகழ்வான் | 1,100 0 |
| இரைற்றன் படகு | 1,250 0 |
| ஹொப்பர் படகு | 200 0 |
| கட்டுமரம் | 200 0 |
| நங்கூர வள்ளம் | 300 0 |

குறிப்பு.—(i) வாடகைக்கமர்த்தும் நேரம் திணைக்களத்தின் வேலை நேரங்களுக்கு அப்பாற்படினும் சனிக்கிழமைகள், ஞாயிற்றுக்கிழமைகள், பொது விடுமுறை நாட்களிலும் மேலதிக ஊதியத்தைச் சமன் செய்வதற்கென இவை எல்லாவற்றின் விடயத்திலும் மேலதிகமாக 100 சத விகிதம் அறவிடப்படும்.

(ii) வேலை நேரங்கள்—வேலை நாட்களில் மு. ப. 7.00 முதல் மு. ப. 12.00 வரையும், பி. ப. 12.30 முதல் பி. ப. 4.30 வரையும் ஆகும்.

(iii) கோரப்பட்ட மாதிரியான கலம் ஒன்றை இழுத்துச் செல்வதற்கென இயந்திரப் படகு ஒன்று உபயோகிக்கப்படின் அவ்விதம் உபயோகிப்பதற்குரிய மேலதிகக் கட்டணம், கொழும்புத் துறைமுக இயந்திரப் படகுகள் இழுவைக் கப்பல்கள் என்பவற்றைப் பயன்படுத்துவதற்கான கட்டண விகிதப்படி செலுத்தப்பட வேண்டும். நேரம் கணக்கிடுவதில் அக்கலம் தனது நங்கூரம் முதலியவற்றிலிருந்து அல்லது வேலைத்தலத்திலிருந்து புறப்படும் நேரமுதலாகத் திரும்பவும் அவ்விடத்தைச் சென்றடையும் வரையுமுள்ள நேரம் சேர்க்கப்படும்.

(24) காற்றமுக்கி

காற்றமுக்கி ஒன்றினை வழக்கமான வேலை நேரங்களில் உபயோகிப்பதற்கான கட்டணம் மணித்தியாலம் ஒன்றுக்கு அல்லது பகுதிக்கு ரூபா 60 வீதமாகும். வேலை நேரத்துக்குப் புறம்பான நேரத்திலும், சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை அரசாங்க விடுமுறை நாட்களில் என்பவற்றினுமான கட்டண விகிதம் 100 சத வீதத்தினுல் அதிகரிக்கப்படுதல் வேண்டும்.

**(25) செப்பனிடுதுறையிலுள்ள எடுத்துச் செல்லக்கூடிய தொலைபேசியும், ஓரப்புற நங்கூர நிலையங்களிலுள்ள உட்புகுத்து தொலைபேசிகளும்**

1. செப்பனிடுதுறையிலுள்ள எடுத்துச் செல்லக்கூடிய தொலைபேசி ஒன்றை அல்லது ஓரப்புற நங்கூர நிலையத்திலுள்ள உட்புகுத்து தொலைபேசி ஒன்றை உபயோகிப்பதற்கு நாளொன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு ரூபா 7 வீதமான கட்டணம் ஒன்று அறவிடப்படும்.

2. அத்துடன், வெளிப்புற அழைப்புகள் தொடர்பில், தந்தி தொலைபேசிப் போக்குவரத்துக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகளிற் குறிப்பிடப்பட்டுள்ள வெளிப்புற அழைப்புகளுக்கான விகிதங்களுக்கிணங்கக் கணிக்கப்படும் கட்டணமும் அறவிடப்படும்.

குறிப்பு.—(அ) எடுத்துச் செல்லக்கூடிய அல்லது உட்புகுத்து தொலைபேசி ஒன்று மரக்கலத்தின் முகவரின் வேண்டுகோளின்படியே வாடகைக்குத் தரப்படும்.

(ஆ) வாடகைக்கமர்த்துபவர் மேலே பந்தி 1, 2 என்பவற்றிற் குறிப்பிட்ட கட்டணங்களைச் செலுத்தப் பொறுப்பாளியாவர்.

(இ) உபகரணம் அவரின் பொறுப்பிலிருக்கும் நேரம் முதல் அது திருப்பித் தரப்படும் வரையும் அதற்கு ஏற்படும் ஏதேனும் சேதத்துக்கு வாடகைக்கமர்த்துபவரே பொறுப்பாளியாவர்.

(ஈ) கொழும்புத் துறைமுக ஆணைக்குழுவின் கணக்காளரால் போதிய முற்பண வைப்பு முதலிலேயே பெறப்படினன்றி இவ்வுபகரணம் வாடகைக்குத் தரப்படமாட்டாது.

**(26) கொழும்புத் துறைமுக ஆணைக் குழுவின் இயந்திர வள்ளங்கள், சிறு இழுவைக் கப்பல்கள் என்பவற்றைப் பயன்படுத்துவதற்கான கட்டணங்கள் துறைமுகத்துள் :**

முதல் மணித்தியாலத்துக்கு அல்லது அதன் பகுதிக்கு உயர்வு தாழ்வற்ற கட்டணமான ரூபா 100, அத்துடன் அடுத்துவரும் ஒவ்வொரு கால் மணித்தியாலம் அல்லது அதன் பகுதிக்கு ரூபா 25.

**துறைமுகத்துக்கு வெளியே, ஆனல் கப்பற்றுறைக்குள்ளே :**

முதல் மணித்தியாலத்துக்கு அல்லது அதன் பகுதிக்கு ரூபா 200, அத்துடன் அடுத்து வரும் ஒவ்வொரு கால் மணித்தியாலம் அல்லது அதன் பகுதிக்கு ரூபா 50.

அரசாங்க இலாஞ்சுகளைப் பயன்படுத்துவதற்கான நிபந்தனைகள்

(அ) ஏதேனும் விசேடமான வேலைக்கு அல்லது விசேட சூழ்நிலைகளில், கட்டணம் துறைமுக ஆணையாளரால் நிர்ணயிக்கப்படும்.

(ஆ) இயந்திர வள்ளம் ஒன்று அபாயகரமான வேலைக்குத் தேவைப்படின், காப்புறுதி ஒழுங்கு செய்யப்படுதல் வேண்டும்.

(இ) மேற்கூறிய கட்டணங்களை மதிப்பிடும் நோக்கத்துக்கென இயந்திர வள்ளமொன்று, வழமையான கப்பற்றுறைக் கடமைகளுக்குக் கிடைக்காததாகும் நேரத்திலிருந்து அது அவ்வித வழமையான கப்பற்றுறைக் கடமைகளுக்குக் கிடைக்கக் கூடியதாகும் நேரம் வரைக்கும் அவ்வித வேலையிலீடுபட்டிருந்ததாகக் கருதப்படல் வேண்டும்.

**(27) எரி பொருளுக்காக மாத்திரம் வரும் கலங்களுக்கான விசேட சலுகை**

வழிகாட்டல், இழுவைக் கப்பல்களைப் பயன்படுத்துதல், கப்பற்றுறையுள் நுழைதல் ஆகியனவற்றிற்கெதிரே குறித்துரைத்த கட்டணத் தொகைகளில் 40% தள்ளுபடி அனுமதிக்கப்படும்.

முன்னைய ஒழுங்குவிதிகளை நீக்கஞ் செய்தல்

1974 மார்ச்சு 29 ஆந் திகதிய 104/10 ஆம் இலக்க அதிவிசேட கசற்றில் வெளியிடப்பட்டனவும் பின்னர்த் திருத்தப்பட்டனவுமான கொழும்புத் துறைமுக 1974 ஆம் ஆண்டின் (கப்பற்றுறைக் கட்டணங்கள்) ஒழுங்குவிதிகள் இத்தால் நீக்கஞ் செய்யப்படுகின்றன.

---

எல். டி—பி. 152/34.

மாஸ்டர்கள் அற்றெண்டன்ற் கட்டளைச் சட்டம்

(369 ஆம் அத்தியாயமான) மாஸ்டர்கள் அற்றெண்டன்ற் கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் கொழும்பு கப்பற்றுறைக்காக கப்பற்றொழில், சுற்றுலா அமைச்சரால் ஆக்கப்பட்டு அமைக்கப்பட்ட விதி.

கொழும்பு,
1975 ம் ஆண்டு ஜனவரி மீ 28 ந உ.

பி. பீ. ஜீ. கலுகல்ல,
கப்பற்றொழில், சுற்றுலா அமைச்சர்

விதி

1970 ஒற்றோபர் 31 ஆந் தேதிய 14,930/2 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட விதியால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறுன வையும், 1936 ஒற்றோபர் 16 ஆந் தேதிய எல். 8, 251 ஆம் இலக்கக் கசெற்றிற்கான அனுபந்தத்தில் வெளியிடப்பட்டனவையுமான 1936 ஆம் ஆண்டின் கொழும்புக் கப்பற்றுறை விதிகள், அவற்றிலுள்ள 21 ஆம் விதியின் (1) ஆம் பந்தியில் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றன :—

(1) " பன்னிரண்டு சதங்கள் " என்ற சொற்களுக்குப் பதிலாக " பதினைந்து சதங்கள் " என்ற சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) " ரூபா 120 " என்ற சொல்லமைப்புக்குப் பதிலாக " ரூபா 200 " சொல்லமைப்பை இடுவதன் மூலமும்.

---

மாஸ்டர்கள் அற்றெண்டன்ற் கட்டளைச் சட்டம்

(369 ஆம் அத்தியாயமான) மாஸ்டர்கள் அற்றெண்டன் கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் கப்பற்றுறை, சுற்றுலா அமைச்சரால் திருகோணமலை கப்பற்றுறைக்கென ஆக்கப்பட்டு அமைக்கப்பட்ட விதி.

பி. பீ. ஜீ. கலுகல்ல,
கப்பற்றொழில், சுற்றுலா அமைச்சர்.

கொழும்பு,
1975 ம் ஆண்டு ஜனவரி மீ 28 ந் உ.

விதி

திரிகோணமலை கப்பற்றுறைக்கென மாஸ்டர்கள் அற்றெண்டன்ற் கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு, அமைக்கப்பட்டதும் 1971 மார்ச்சு 5 ஆந் திகதிய 14,948 ஆம் இலக்க கசற்றில் வெளியிடப்பட்டதுமான விதிகள் அதன் 1 ஆம், விதியில் பின்வருமாறு திருத்தப்படுகின்றன:—

(1) அதன் 1 ஆம் பந்தியில் " வழிகாட்டுதல் " என்ற தலைப்பின் கீழ்—

(அ) " பன்னிரண்டு சதங்கள் " என்ற சொற்களுக்குப்பதிலாக " பதினைந்து சதங்கள் " என்ற சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) " ரூபா 120 " என்ற சொல்லமைப்புக்குப் பதிலாக " ரூபா 200 " என்ற செல்லமைப்பை இடுவதன் மூலமும் ;

(2) தலைப்பு " இழுவைக்கப்பற் கட்டணங்கள் " என்பதன் கீழ்—

(அ) அத்தலைப்பின் கீழ் " 400.00 " என்ற எண் காணப்படும் எல்லா இடங்களிலும் அதற்குப் பதிலாக " 600.00 " என்ற எண்ணை இடுவதன் மூலமும் ;

(ஆ) " 800.00 " என்ற எண்ணுக்குப் பதிலாக " 1,200.00 " என்ற எண்ணை இடுவதன் மூலமும் ;

(இ) " 1,200.00 " என்ற எண்ணுக்குப் பதிலாக " 1,800.00 " என்ற எண்ணை இடுவதன் மூலமும் ;

(3) " அரசாங்க இலாஞ்சுகளை பயன்படுத்துவதற்கான கட்டணங்கள் " என்ற தலைப்பின் கீழ் உள்ள எல்லா விடயங்களுக்குப் பதிலாகப் பின்வரும் புதிய விடயங்களை இடுவதன் மூலமும் :—

" துறைமுகத்துக்குள்ளே —

முதல் மணித்தியாலத்துக்கு அல்லது அதன் பகுதிக்கு உயர்வு தாழ்வற்ற கட்டணமான ரூபா 100, அத்துடன் அடுத்துவரும் ஒவ்வொரு மணித்தியாலம் அல்லது அதன் பகுதிக்கு ரூபா 25.

துறைமுகத்துக்கு வெளியே ஆனால் கப்பற்றுறை எல்லைக்குள்ளே—

முதல் மணித்தியாலத்துக்கு அல்லது அதன் பகுதிக்கு ரூபா 200, அத்துடன் அடுத்து வரும் ஒவ்வொரு கால் மணித்தியாலம் அல்லது அதன் பகுதிக்கு ரூபா 50.

அரசாங்க இலாஞ்சுகளைப் பயன்படுத்துவதற்கான நிபந்தனைகள் :

(அ) ஏதேனும் விசேட வேலைக்கு அல்லது விசேடச சந்தர்ப்பங்களிற் கப்பற்றுறை ஆணையாளர் நிர்ணயிக்கக்கூடிய கட்டணமொன்று ;

(ஆ) அபாயமான வேலைக்கு இலாஞ்சு ஒன்று தேவைப்படின் அதற்கு காப்புறுதி ஒழுங்கு செய்யப்படல் வேண்டும். ;

(இ) மேற்கூறப்பட்ட கட்டணங்களை மதிப்பிடும் நோக்கத்திற்கு சாதாரண துறைமுக வேலைக்கு இலாஞ்சு ஒன்று கிடைக்காது நீங்கும் நேரத்திலிருந்து மீண்டும் சாதாரண துறைமுக வேலைக்கு கிடைக்கும் நேரம் வரைக்கும் வேலையில் ஈடுபடுத்தப்பட்டதாக கருதப்படல் வேண்டும். "

---

எல். டீ—பீ. 152/34

மாஸ்டர்கள் அற்றெண்டன்ற் கட்டளைச்சட்டம்

(369 ஆம் அத்தியாயமான) மாஸ்டர்கள் அற்றெண்டன்ற் கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் கப்பற்றொழில், சுற்றுலா அமைச்சரால் காலிக் கப்பற்றுறைக்கென ஆக்கப்பட்டு அமைக்கப்பட்ட விதி.

பி. பீ. ஜீ. கலுகல்ல,
கப்பற்றொழில், சுற்றுலா அமைச்சர்.

கொழும்பு,
1975 ம் ஆண்டு ஜனவரி மீ 28 ந் உ.

விதி

காலிக் கப்பற்றுறைக்கென மாஸ்டர்கள் அற்றெண்டன்ற் கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு அமைக்கப்பட்டதும் 1971.7.23 ஆந்தேதிய 14,967/10 ஆம் இலக்க கசெற்றில் வெளியிடப்பட்டதுமான விதிகள் அதன் 1 ஆம் விதியின் பின்வருமாறு திருத்தப்படுகின்றன :—

(1) அதன் 1 ஆம் பந்தியில் " வழிகாட்டுதல் " என்ற தலைப்பின் கீழ்—

(அ) " பன்னிரண்டு சதங்கள் " என்ற சொற்களுக்குப் பதிலாக "பதினைந்து சதங்கள் " என்ற சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) " ரூபா 120 " என்ற சொல்லமைப்புக்குப் பதிலாக " ரூபா 200 " என்ற சொல்லமைப்பை இடுவதன் மூலமும் ;

(2) தலைப்பு " இழுவைக்கப்பற் கட்டணங்கள் " என்பதன் கீழ்—

(அ) அத்தலைப்பின் கீழ் " 400.00 " என்ற எண் காணப்படும் எல்லா இடங்களிலும் அதற்குப் பதிலாக " 600.00 " என்ற எண்ணை இடுவதன் மூலமும் ;

(ஆ) " 800.00 " என்ற எண்ணுக்குப் பதிலாக " 1,200.00 " என்ற எண்ணை இடுவதன் மூலமும் ;

(இ) " 1200.00 " என்ற எண்ணுக்குப் பதிலாக " 1,800.00 " என்ற எண்ணை இடுவதன் மூலமும்.

(3) " அரசாங்க இலாஞ்சுகளை பயன்படுத்துவதற்கான கட்டணங்கள் " என்ற தலைப்பின் கீழ் உள்ள எல்லா விடயங்களுக்கும் பதிலாகப் பின்வரும் புதிய விடயங்களை இடுவதன் மூலமும் :—

"துறைமுகத்துக்குள்ளே—

முதல் மணித்தியாலத்துக்கு அல்லது அதன் பகுதிக்கு உயர்வு தாழ்வற்ற கட்டணமாக ரூபா 100, அத்துடன் அடுத்து வரும் ஒவ்வொரு கால் மணித்தியாலம் அல்லது அதன் பகுதிக்கு ரூபா 25.

துறைமுகத்துக்கு வெளியே ஆனால் கப்பற்றுறை எல்லைக்குள்ளே—

முதல் மணித்தியாலத்துக்கு அல்லது அதன் பகுதிக்கு ரூபா 200 அத்துடன் அடுத்துவரும் ஒவ்வொரு கால் மணித்தியாலம் அல்லது அதன் பகுதிக்கு ரூபா 50.

அரசாங்க இலாஞ்சுகளைப் பயன்படுத்துவதற்கான நிபந்தனைகள்

(அ) ஏதேனும் விசேட வேலைக்கு அல்லது விசேடச் சந்தர்ப்பங்களில் கப்பற்றுறை ஆணையாளர் நிர்ணயிக்கக்கூடிய கட்டணமொன்று.

(ஆ) அபாயமான வேலைக்கு இலாஞ்சு ஒன்று தேவைப்படின் அதற்கு காப்புறுதி ஒழுங்கு செய்யப்படல் வேண்டும்.

(இ) மேற்கூறப்பட்ட கட்டணங்களை மதிப்பிடும் நோக்கத்திற்கு சாதாரண துறைமுக வேலைக்கு இலாஞ்சு ஒன்று கிடைக்காது நீங்கும் நேரத்திலிருந்து மீண்டும் சாதாரண துறைமுக வேலைக்கு கிடைக்கும் நேரம் வரைக்கும் வேலையில் ஈடுபடுத்தப் பட்டதாக கருதப்படல் வேண்டும்."

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.